# முருகவேள் பன்னிரு திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறை: ஓர் ஆய்வுப் பார்வை

# Murugavel Panniru Thirumurai: An Analytical Perspective on the Twelfth Thirumurai

**இரா. சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன்** / R. Seeta Lechumi Ratha Krishnan[1]

**Abstract**

Within the historical background of Hinduism, the worship of Murugan holds a distinctive place in Tamil religious tradition. This study highlights the nature of the Thirumurai literature that emerged under the influence of the Murugan bhakti movement, along with the social and spiritual contexts that shaped their formation. It also points to the efforts of Thanikaimani Va. Su. Chengalvaraya Pillai, who compiled the Murugavel Panniru Thirumurai by bringing together the hymns of Arunagirinathar and the devotional poems on Murugan composed by ancient poets. In particular, the circumstances surrounding the creation of the twelfth Thirumurai, Seyththondar Puranam, the contributions of Thenur Varakavi Chockalinganar, and the structure, purpose, and devotional expressions found in both Seyth Thondar Thogai and Seyththondar Puranam are examined here. The study further clarifies the historical and literary significance of these two works within the Murugan bhakti tradition and reveals how the legacy of service by Murugan devotees has been preserved in Tamil spiritual literature. The primary objective of this research is to compile and present information related to Seyth Thondar Thogai and Seyththondar Puranam, the two works that constitute the twelfth book of the Murugavel Panniru Thirumurai.

Date of submission: 2025-08-11
Date of acceptance: 2025-09-10
Date of Publication: 2025-12-30
Corresponding author's Name: R. Seeta Lechumi Ratha Krishnan
Email: rseeta@um.edu.my

**Keywords:** Murugavel Panniru Thirumurai, Twelfth Thirumurai, Seyth Thondar Thogai, Seyththondar Puranam, Thanikaimani Va. Su. Chengalvaraya Pillai

## 1.0 முன்னுரை

ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும் அருநெறி ‘சமயம்’ எனப்படும். எங்கெல்லாம் புனித உணர்வு தோன்றுகிறதோ அங்கெல்லாம் சமயம் வேரூன்றியிருப்பதாகக் கொள்ளலாம். சமயம் என்பது இறை, உயிர், உலகம் பற்றிய ஒரு நம்பிக்கை முறை. கடவுள் நம்பிக்கை அல்லது கடவுள் எழுந்தருளியிருப்பதை ஏற்கின்ற அமைப்புகளைச் சமயங்கள் அல்லது மத நம்பிக்கைகள் என்று அழைக்கின்றோம். இந்தியாவின் பண்டைய சமயம் இந்து சமயம். யாராலும் தோற்றுவிக்கப்படாமல், சிந்துவெளி நாகரிகம் தொட்டே இந்து சமயம், ‘சனாதன தர்மம்’ மற்றும் ‘அநாதி உண்மை’ என்ற பெயரில் வழங்கி வரலாயிற்று (சற்குரு போதிநாத

[1]The author is a senior lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

வேலன்சுவாமி, 2018). அவ்வகையில், இந்து சமயமானது காலத்தால் பழமையானதாகவும் காலக் கணக்குகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகவும் திகழ்கின்றது. இந்து சமயம் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது (சைவ சமய விளக்கம், 1987). இவற்றுள், கௌமாரம் எனப்படுவது முருகப்பெருமானை முதற்பொருளாகக் கொண்ட உட்பிரிவாகும். சங்க காலம் தொடங்கி தற்காலம் வரையில் முருக வழிபாடு தமிழர்களின் மரபில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது (இராசேந்திரன் மற்றும் பலர்., 2012).

## 2.0 திருமுறை – ஓர் அறிமுகம்

தமிழகத்தின் ஆன்மிக வரலாற்றில் பக்தி இயக்கம் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. பக்தி இயக்கத்தின் செல்வாக்கில் தோன்றிய பல்வேறு இலக்கியங்கள், தமிழுக்கு மட்டுமல்லாமல் இந்திய கலாச்சாரத்திற்கும் பெரும் பங்களிப்பை அளித்துள்ளன. 'ஷண்மதம்' எனும் அறுவகைச் சமயங்களை மையமாகக் கொண்ட பக்தி இலக்கியங்கள் உருவானபோதிலும், முருக பக்தி இலக்கியம் தனக்கே உரிய ஒப்பற்ற கலைநயத்தாலும் பக்திநயத்தாலும் தனித்துவம் பெற்றுள்ளது. 'திருமுறை' என்ற சொல்லிற்கு அழகும் அருட்செல்வமும் பொருந்திய பனுவல் என்பது பொருளாகும். பரம்பொருளை உள்ளத்தாலும் உணர்வாலும் கண்டு அனுபவித்த மகான்களின் அனுபவ மொழிகளாக, திருமுறைப் பாடல்கள் தெய்வத்தன்மை பொருந்தியவையாக அமைந்துள்ளன (கந்தசாமி, 1995). திருமுறை எனும் சொல்லானது, நாயன்மார்கள் மற்றும் நால்வர் இயற்றிய தேவாரம், திருவாசகம் போன்ற பன்னிரு திருமுறைகளை முதலில் குறிப்பிட்டாலும், பிற்காலத்தில் முருகபக்தி இலக்கியங்களும் அதே வடிவில் 'முருகவேள் பன்னிரு திருமுறை' எனத் தொகுக்கப்பட்டன.

## 3.0 தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை – ஓர் அறிமுகம்

பன்னிரு திருமுறை என்றாலே நம் நினைவுக்கு வருவது சைவத் திருமுறைகள் தாம். அத்தொகுப்பு ஐம்முகச் சிவனுக்கு உரியது. அறுமுகச் சிவனாகிய முருகவேளுக்கும் பன்னிரு திருமுறை உண்டு என்று அறிந்தவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே. முருகவேளுக்கென திருமுறைகளைத் தொகுத்துத் தந்தவர் திருத்தணிகை வ.சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள். சைவ சமயத்தில் சிவபெருமானின் புகழையும் சிவனடியார்களின் மகிமைகளையும் போற்றும் நூல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, அற்புதத் திருவந்தாதி, பெரிய புராணம் உள்ளிட்ட 45 தமிழ் இலக்கிய நூல்கள் 'பன்னிரு திருமுறைகள்' என்று போற்றப்படுகின்றன. அதேபோல, முருகப் பெருமானுக்கும் 'முருகவேள் பன்னிரு திருமுறைகள்' தொகுக்கப்பட வேண்டும் என்று தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை என்ற புலவர் எண்ணங்கொண்டு, முருகனின் புகழ் பாடும் நூல்களைத் திரட்டத் தொடங்கினார் (மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம், 1998-2011).

தென் ஆற்காடு பகுதியில் வாழ்ந்த வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளை என்பவர் தான் முதலில் அருணகிரிநாதரின் திருப்புகழை ஓலைகளில் இருந்து தேடி எடுத்துப் பதிப்பித்தவர். சுப்பிரமணிய பிள்ளையின் மகனான தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, திருவகுப்புகள் ஆகியவற்றுக்கு நுட்பமான ஆராய்ச்சி செய்து, சிறந்த உரை எழுதியுள்ளார் (கணபதி சுப்ரமணியன், 2020). 1951-ஆம் ஆண்டில் தணிகைமணி வ. சு. செங்கல்வராயப்பிள்ளை அவர்கள் பதினொரு திருமுறைகளாக முருகவேள் திருமுறையை வடிவமைத்து அவற்றுக்குச் சிறப்பான உரை எழுதி வெளியிட்டார் (சாமி, 2015).

## 4.0 முருகவேள் பன்னிரு திருமுறை – ஓர் அறிமுகம்

முருகவேளுக்காக திருமுறைகளைத் தொகுத்து வந்த போது, தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, ஒரு சிக்கலைச் சந்திக்க நேர்ந்தது. சைவத் திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறையாகப் பெரிய புராணம் இருப்பது போல், முருகவேள் பன்னிரு திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறையாக முருகவேள் அடியார்களின் வரலாற்றினைத் தொகுக்க அவர் எண்ணம் கொண்டார். அப்படி ஒரு புராணம் இல்லையே என அவர் மனம் ஏங்கியபோது அதற்கு முருகப்பெருமானின் அருளால் தேனூர் வரகவி சொக்கலிங்கம் பிள்ளை அவர்களைப் பற்றிய ஒரு நூல் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளைக்குக் கிடைக்கப்பெற்றது. அதன்வழி, தேனூர் வரகவி சொக்கலிங்கம் பிள்ளை அவர்களைக் கண்டறிந்து தமது எண்ணத்தைக் கூறி 'சேய்த்தொண்டர் புராணம்' இயற்றும்படி வேண்டியுள்ளார். தேனூர் வரகவி சொக்கலிங்கம் பிள்ளை அவர்களும் சம்மதம் தெரிவித்து ஓராண்டிலே அதனை இயற்றி முடித்துள்ளார்.

பின்வரும் அட்டவணை தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்ட முருகவேள் பன்னிரு திருமுறையில் இடம்பெற்றுள்ள பாடல்களைக் காட்டுகின்றது.

| திருமுறை எண் | பாடல் தலைப்பு |
|---|---|
| 1 | திருப்பரங்குன்றம் திருப்புகழ் |
| 2 | திருச்செந்தூர் திருப்புகழ் |
| 3 | திருவாவினன்குடி திருப்புகழ் |
| 4 | திருவேரகம் (சுவாமிமலை) திருப்புகழ் |
| 5 | குன்றுதோறாடல் திருப்புகழ் |
| 6 | பழமுதிர்சோலை திருப்புகழ் |
| 7 | பொதுத் திருப்புகழ் பாடல்கள் |
| 8 | கந்தரலங்காரம், கந்தரந்தாதி |
| 9 | திருவகுப்பு |
| 10 | கந்தரனுபூதி |
| 11 | நக்கீரர், பரிபாடல் ஆசிரியர்கள், கல்லாடர் முதலானவர்கள் பாடல்கள் |
| 12 | முருகனடியார்கள் வரலாறு ஆகிய சேய்த்தொண்டர் புராணம் |

இந்தப் பன்னிரு திருமுறைகளுள் பெரும்பாலும் அருணகிரிநாதரால் இயற்றப்பட்டவை. முருகனைப் போற்றிய பக்தி இலக்கியத்தை, தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்புடன் நிலைநிறுத்திய பெருமை அவரையே சாரும். பதினோறாம் திருமுறையானது முற்கால அடியார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாயிற்று. சிறந்த முருகனடியாரான தேனூர் வரகவி வே. செ. சொக்கலிங்கனார் முருகன் அடியார்கட்கு என 'சேய்த் தொண்டர்த் தொகை' பாடியருளினார். அதன்பின், முருகனடியார்கள் வரலாற்றைச் சேய்த் தொண்டர்த் தொகை நூலிலிருந்து விரித்து சேய்த்தொண்டர் புராணமாகத் தேனூராரே பாடியருளினார்.

### 5.0கருத்துரை

தமக்குச் செய்யும் வழிபாடுகளைக் காட்டிலும் தன் அடியவர்களுக்குச் செய்யும் பணிவிடைகளால் இறைவன் பெரிதும் மகிழ்கிறான் என்பது ஆன்றோர் நமக்குச் சொல்லிச் சென்ற அறிவுரை. அவ்வகையில் 'அடியார்க்கு அடியேன் போற்றி' என்று சிவனடியார்களாம் நாயன்மார்களைப் போற்றி தொழுதார் சேக்கிழார் பெருமான். அந்த வரிசையில் மாயோன் மருகனாம் முருகப் பெருமானின் அடியவர்களுக்கும் இடம் உண்டு. முருகப்பெருமானின் திருப்பணிகளிலும், அவனது புகழைப் பரப்புவதிலுமே தங்களது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட இந்த அடியவர்களை 'சேய்த் தொண்டர்கள்' எனப் போற்றிச் சிறப்பிப்பார்கள். அவ்வகையில், முருகனடியார்களின் பெருமைகளையும் மகிமையையும் உணர்த்தக்கூடியவை 'சேய்த் தொண்டர்த் தொகை' மற்றும் 'சேய்த்தொண்டர் புராணம்' எனும் இரு நூல்களாகும். முருகவேள்

பன்னிரு திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறைகளாக விளங்கும் இவ்விரு நூல்கள் தொடர்பான செய்திகள் இவ்விடம் சுட்டி விளக்கப்படுத்தப்படுகின்றன.

### 5.1. சேய்த் தொண்டர்த் தொகை

அருணகிரிநாதரின் நூல்களைப் பத்துத் திருமுறைகளாகத் தொகுத்த தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, பழந்தமிழ் இலக்கியங்களிலுள்ள முருகன் தொடர்பான பாடல்களைப் பதினொன்றாம் திருமுறையாகத் தொகுத்தார். எனினும், பன்னிரு சைவத்திருமுறைகள் போல குமரக்கடவுளுக்கு அமையாததை எண்ணி வருந்திய அவர், முருகனை மனமுருக வேண்டினார். அப்போது இறையருளால் தணிகைமணி செங்கல்வராய பிள்ளைக்கு 'சுந்தரர் உலா' என்ற புத்தகம் கிடைத்தது. அந்தப் புத்தகத்தின் கருத்துகளிலும் அழகிய தமிழ் நடையிலும் வியந்துபோன செங்கல்வராயப் பிள்ளை, அதனை எழுதிய புலவரைத் தேடி அலைந்தார். இறுதியாக தேனூர் வரகவி வே. செ. சொக்கலிங்கனார் என்ற புலவர்தான் அதை எழுதியவர் என்று கண்டறிந்து, அவரிடம் கடிதம் மூலம் தமது வேண்டுகோளை விடுத்தார். பதினொரு திருமுறைகளைத் தொகுத்த அவருக்காக, பன்னிரண்டாம் திருமுறையாக 'முருகனடியார்கள் வரலாறு' என்ற 'சேய்த்தொண்டர் புராணம்' எனும் நூலை எழுத, சொக்கலிங்கனார் ஒப்புக்கொண்டு முருகன் அருளால் ஒரே ஆண்டில் 12-ஆம் திருமுறையை எழுதிக் கொடுத்தார். முருகனடியார்கள் வரலாறு என்ற இந்த 'சேய்த்தொண்டர் புராணம்' நூல் முருகப் பெருமானின் 12ஆம் திருமுறையானது (முரளி, 2020).

இந்நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்தால் ஒருண்மை திருவருள் அதில் ஒளித்து வைத்துள்ளது புரியும். தேனூர் வரகவி சொக்கலிங்கனார் தீவிர மணிவாசகப் பித்தர். அவர் 'மணிவாசகர் உலா' பாடியிருந்தால் அதில் வியப்பில்லை. ஆனால், அவர் பாடி வெளியிட்டதோ 'சுந்தரர் உலா'. சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடுவதற்காகவே அவதரித்தவர் என்று பெரியபுராணம் கூறுகிறது. அதுபோல், சொக்கலிங்கனார் பின்னால் 'சேய்த்தொண்டத் தொகை' பாடுவதற்கென்றே சுந்தரரிடம் ஆசியும் ஆற்றலும் பெறவே போலும் 'சுந்தரர் உலா' பாடியருளினார். இந்தத் திருவருளைப் புரிந்து கொண்டு தான் தணிகைமணியார் இவரிடம் சேய்த் தொண்டர் புராணம் பாடப்பணிந்து வேண்டினார் என்பதனை அற முடிகின்றது (சாமி, 2013).

தேனூர் வரகவி சொக்கலிங்கனார் சேய்த்தொண்டர் புராணத்தை இயற்றுவதற்கு முன்பு 'சேய்த் தொண்டர்த் தொகை' எனும் தலைப்பில் எட்டு செய்யுள்களை இயற்றியுள்ளார். இச்செய்யுள்கள் 'திருத்தொண்டர்த் தொகை' எனும் அமைப்பில் 'அடியேன்', 'அடியார்க்கும் அடியேன்' என வரும் உடுக்குறியிட்டவாறு அமைந்துள்ளன. அதனைத் தொடர்ந்து அவர் சேய்த்தொண்டர் திருவந்தாதியையும் இயற்றி, சேய்த்தொண்டர் புராணத்தை இயற்றியுள்ளார். இம்முயற்சியானது பெரியபுராணத்தின் தோற்றத்திற்குச் சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் ஆகியோர் வழிவகுத்த அமைப்பிலேயே நடந்துள்ளது என்பது குறிக்கத்தக்கது (பழனியப்பன், மு., 2014). முருகவேள் பன்னிரு திருமுறையின் பதினோராம் திருமுறையில் வகுக்கப்பட்டுள்ளதுபோல, பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் இருந்த 41 அடியார்களைப் பற்றிய குறிப்புகள் 'சேய்த் தொண்டர்த் தொகை' எனும் பகுதியில் 'முருகவேள் பன்னிரு திருமுறை தொகுதி 4' என்ற நூலில் காணப்படுகின்றன. அந்த 41 அடியார்கள் முருகவேளுடன் சம்பந்தப்பட்ட குறிப்புகளை மட்டுமே கொண்டுள்ள சுருக்க வரலாற்றையும் இப்பகுதியில் காண முடிகின்றது. அவ்வடியார்களாவார் பின்வருமாறு:

1) செந்தில்வாழ் அந்தணர்

2) அகத்தியர்

3) முசுகுந்தர்

4) நாகனார்

5) நக்கீரர்

6) நல்லியக்கோடன்

7) ஏழு பரிபாடல் ஆசிரியர்கள் (கடுவன் இளஎயினனார், ஆசிரியன் நல்லந்துவனார்,

குன்றம் பூதனார், கேசவனார், நல்லழிசியார், நப்பண்ணனார், நல்லச்சுதனார்)

8) கல்லாட நூலாசிரியர்

9) ஔவையார்

10) சேந்தனார்

11) கச்சியப் சிவாசாரியர்

12) கோனேரியப்பர்

13) முருகம்மையார்

14) பொய்யாமொழியார்

15) அருணகிரிநாதர்

16) ஞானவரோதயர்

17) நிரம்ப அழகிய தேசிகர்

18) சேறைக் கவிராசபிள்ளை

19) குமரகுருபரர்

20) சிவப்பிரகாச சுவாமிகள்

21) திருஞானசம்பந்த தேசிகர்

22) சம்பந்த சரணாலய சுவாமிகள்

23) மார்க்க சகாயதேவர்

24) குணசீலர்

25) அந்தகக் கவி வீரராகவ முதலியார்

26) சிதம்பர சுவாமிகள்

27) சிற்றம்பல நாடிகள்

28) வென்றிமாலைக் கவிராயர்

29) பகழிக் கூத்தர்

30) பாலசுப்பிரமணியக் கவிராயர்

31) விசயகிரி சின்னோவையள்

32) வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை

33) மேலகரம் பண்டாரக்கவிராயர்

34) வைத்தியநாத தேசிகர்

35) சாமிநாத தேசிகர்

36) சிவஞான தேசிகர்

37) கச்சியப்ப முநிவர்

38) தொட்டிக்கலை சுப்பிரமணிய முநிவர்

39) காஞ்சி. சிதரம்பர முநிவர்

40) செங்கோடைக் கவிராஜ பண்டாரத்தையா

41) கந்தப்ப தேசிகர்

*(மூலம்: செங்கல்வராயன், வ. சு., 1951, 881-882).*

‘தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்’ எனத் தொடங்கும் திருத்தொண்டர்த் தொகையைப் போல ‘செந்தில்வாழ் அந்தணர்தம் அடியர்க்கும் அடியேன்’ என்று சேய்த் தொண்டர்த் தொகை தொடங்கப்பட்டுள்ளது. செந்தில்வாழ் அந்தணர் கங்கைக் கரையில் தவம் செய்து, பூலோகம், சுவர்க்கலோகம், சத்தியலோகம் ஆகிய மூன்று உலகங்களிலும் சென்று வசிக்கும் சுதந்திரத்தைப் பிரமன், சிவன், திருமால் ஆகிய மூவரிடத்திடமிருந்து வரமாகப் பெற்ற காரணத்தால் ‘திரிசுதந்தரர்’ எனப் பெயர் பெற்றனர். திரிசுதந்தரர் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை 78,000 பேர் ஆவர் (செங்கல்வராயன், வ. சு., 1951). இவர்கள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தலங்களில் சென்று அமர்ந்துள்ளதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

**அட்டவணை 1:**
**திரிசுதந்தரர்கள் சென்று அமர்ந்த தலங்கள், எண்ணிக்கை மற்றும் பூசித்த இறைவன் பெயர்**

| எண் | தலப்பெயர் | எண்ணிக்கை | பூசித்த இறைவன் |
|---|---|---|---|
| 1 | விருத்தாசலம் | 1,000 பேர் | சிவபிரான் |
| 2 | திருச்செந்தூர் | 2,000 பேர் | முருகவேள் |
| 3 | சிதம்பரம் | 3,000 பேர் | நடராஜ ப்பெருமான் |
| 4 | கமலா சனபுரம் | 4,000 பேர் | திருமால் |
| 5 | திருவண்ணா மலை | 5,000 பேர் | சிவபிரான் |
| 6 | ஜகந்நாத் | 6,000 பேர் | திருமால் |

| | | | |
|---|---|---|---|
| 7 | திருவீழி மிழலை | 7,000 பேர் | சிவபிரான் |
| 8 | மதுரை | 8,000 பேர் | சிவபிரான் |
| 9 | தண்டகவனம் | 9,000 பேர் | ஸ்ரீராமர் |
| 10 | கோகுலம் | 10,000 பேர் | திருமால் |
| 11 | வதிரிகாச்சிரமம் | 11,000 பேர் | திருமால் |
| 12 | சுவாமி மலை | 12,000 பேர் | முருகவேள் |
| மொத்தம் | | 78,000 பேர் | |

(மூலம்: செங்கல்வராயன், வ. சு., 1951, 885).

சேய்த்தொண்டர்த் தொகையைப் பாடி அதன்பின் சேய்த்தொண்டர் புராணம் பாடுங்கள் என்று தேனூர் வரகவி சொக்கலிங்கனாருக்குக் குறிப்பு கொடுத்ததும் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை தாம் என்று அறிய முடிகின்றது (சாமி, 2013). ஆக, எல்லாத் தகவல்களும் இவருக்கு முருகன் இதயத்தில் திருவடி பதித்து பத்தியையும், மூளையில் திருவடி பதித்து பாடும் ஆற்றலையும் ஊட்டிட இவர் அருளியதுதான் இந்தச் சேய்த்தொண்டர்த் தொகை என்பது தெள்ளத் தெளிவாகின்றது.

5.2. சேய்த்தொண்டர் புராணம்

சேக்கிழார் இயற்றிய ‘திருத்தொண்டர்புராணம்’ என்ற ‘பெரியபுராணம்’ நாயன்மார்களின் சிவத்தொண்டினை எடுத்துரைக்கும் நூல். அதுபோன்று முருகனடியார்களின் அற்புதத் தொண்டினை உரைப்பது ‘சேய்த்தொண்டர் புராணம்’ ஆகும். தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்களால் தொகுக்கப்பெற்ற முருகவேள் பன்னிரு திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறையாக அமைவது சேய்த்தொண்டர் புராணம் ஆகும். இதனை இயற்றியவர் தேனூர் வரகவி வே. செ. சொக்கலிங்கனார் ஆவார். சேய் + தொண்டர் + புராணம் தான் சேய்த்தொண்டர் புராணம் ஆகியது, அதாவது எந்தை ஈசனது சேய் ஆகிய குமரக்கடவுளின் தொண்டர்களுடைய வாழ்க்கை பற்றிய புராணமே சேய்த்தொண்டர் புராணம் ஆகும் (ஸ்வாமி, 2019).

சிவபிரானுக்குரிய 12ஆம் திருமுறையைப் போல முருகன் அடியார் சரித்திரங்களைக் கூறுவது ‘சேய்த்தொண்டர் புராணம்’. இது 2708 பாடல்களைக் கொண்டது (செங்கல்வராயன், வ. சு., 1951). சேய்த்தொண்டர் புராணம், 1951-ஆம் ஆண்டு வெளிவந்த ‘முருகவேள் பன்னிரு திருமுறை தொகுதி 4’ என்ற நூலோடு அச்சிடப்படாமல், 1960-ஆம் ஆண்டில் ‘முருகவேள் பன்னிரு திருமுறையில் பன்னிரண்டாந் திருமுறையாகிய சேய்த்தொண்டர் புராணம் (முருகனடியார்களின் வரலாறு)’ எனும் தலைப்பில் தனி நூலாக அச்சிடப்பட்டு வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது.

1951-ஆம் ஆண்டில் தணிகைமணி வ. சு. செங்கலவராய பிள்ளை அவர்கள் பதினொரு திருமுறைகளாக, முருகவேள் திருமுறையை வடிவமைத்து அவற்றுக்குச் சிறப்பான உரை எழுதி வெளியிட்டார். அப்போது பதினோராம் திருமுறை வரை கந்தவேளுக்கு அமைக்கப்பெற்றுவிட்டது. சைவத் திருமுறையை ஒட்டி பன்னிரண்டாம் திருமுறையாகத் திருத்தொண்டர் புராணம் யாராலும் செய்யப்படவில்லையே என்ற ஏக்கம் தணிகைமணி மனதில் ஏற்பட்டு அக்கருத்தை அவர் அப்பதிப்பில் வெளியிட்டார். இந்த ஏக்கம் தீரப் பிறந்தது தான் சேய்த்தொண்டர் புராணம் ஆகும். 1952-ஆம் ஆண்டிலேயே சேய்த்தொண்டர் புராணம் இயற்றும் பணி தொடங்கி, சிற்சில பாடல்கள் திருக்கழுகுன்றத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டன. அப்பணி சிற்சில ஆண்டுகளில் முழுமை பெற்று 1961-ஆம் ஆண்டில் முழுப் புராணமாக ஆகி வெளிவந்தது (பழனியப்பன், மு., 2014).

சேய்த்தொண்டர் புராணத்தில் அறுபத்தாறு தனியடியார்களும் பன்னிரு தொகையடியார்களும் அவர்களின் வரலாறும் தொண்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவர்களின் முழுப்பட்டியலும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. முசுகுந்தர், நல்லியக் கோடர், கச்சியப்ப சிவாசாரியார், முருகம்மையார், சம்பந்த சரணாலயர், சாமிநாத தேசிகர், குமர குருதாசர், நல்லந்துவனார், மேலகரம் பண்டாரக்

கவிராயர், தேவராய சுவாமிகள், புராணிகர்கள், பாடாது விடுபட்டோர் ஆகியோர் தொகையடியார்கள் ஆவர்; ஏனையோர் தனி அடியார்கள். (சொக்கலிங்கனார், வே. செ., 1960).

இப்புராணத்துள் ஔவையார், மீனாட்சி அம்மையார், முருகம்மையார் ஆகிய மூன்று பெண்ணடியார்கள் பாடப்பெற்றுள்ளனர். இவர்கள் தவிர ஏனைய அறுபத்து மூவர் ஆணடியார்கள். இராமலிங்க வள்ளலார், அருணகிரிநாதர், குமரகுருபரர், நக்கீரர், அகத்தியர், கச்சியப்ப சிவாச்சாரியார், பாம்பன் சுவாமிகள் போன்ற பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த முருகனின் தொண்டர்கள் வரை இதனுள் பாடப்பெற்றுள்ளனர். கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த முருகனடியார்கள் தொடங்கி இந்தப் புராணம் பாடப்பட்டுள்ளது.

செந்தில்வாழ் அந்தணர் சருக்கம், கம்பை சூழ் சருக்கம், குமர குருபரச் சருக்கம், வென்றி மாலைச் சருக்கம், அரஹாரச் சருக்கம், காவடிச் சருக்கம், குகனேரிச் சருக்கம், கல்லாடச் சருக்கம், தென்பழநிச் சருக்கம், நின்றசீர்ச் சருக்கம், நாரதச் சருக்கம், வானார்ந்த சருக்கம் ஆகிய பன்னிரண்டு சருக்கங்கள் சேய்த்தொண்டர் புராணத்துள் உள்ளன. அவை இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் காண்டத்தில் செந்தில்வாழ் அந்தணர் சருக்கம், கம்பை சூழ் சருக்கம், குமர குருபரச் சருக்கம், வென்றி மாலைச் சருக்கம், அரஹாரச் சருக்கம், காவடிச் சருக்கம் ஆகிய ஆறு சருக்கங்களும் இரண்டாம் காண்டத்தில், குகனேரிச் சருக்கம், கல்லாடச் சருக்கம், தென்பழநிச் சருக்கம், நின்றசீர்ச் சருக்கம், நாரதச் சருக்கம், வானார்ந்த சருக்கம் ஆகிய ஆறு சருக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இதிலும் சேக்கிழாரின் படைப்பு முறை பின்பற்றப்பெற்றுள்ளது. அதாவது சருக்கங்களின் பெயர்கள் திருத்தொண்டத்தொகைப் பாடல்களின் முதலடி கொண்டு தலைப்பிட்டிருப்பது சேக்கிழார் தந்தமுறை. இங்கும் சேய்த்தொண்டத் தொகையின் பன்னிரு பாடல்களின் முதற்சீர் சேய்த்தொண்டர் புராணச் சருக்கமாக அமைக்கப்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது (பழனியப்பன், மு., 2014).

இப்புராணம் விருத்தப் பாவகை பலவற்றால் பாடப்பெற்றுள்ளது. இது நிலம் எனத்தொடங்கி இம்மாநிலம் என முடிகின்றது. இவ்வாறு வடிவமைப்பில் பெரியபுராணத்தை ஒத்துச் செய்யப்பெற்றுள்ள சேய்த்தொண்டர் புராணம் முருக பக்தியளவில் மிக முக்கியமான பக்திக் காப்பியம் ஆகும். இவ்வகையில் சேய்த்தொண்டர் புராணம் முருகப்பெருமானின் அடியார்களின் வாழ்க்கை, தொண்டு மற்றும் சோதனைகளை மாற்றிய சாதனைகளை எடுத்துரைப்பதாக அமைகின்றது. 'முருகத்தொண்டர்களின் முகவரி' எனச் சேய்த்தொண்டர் புராணத்தைச் சிறப்பித்துக் கூறுவதில் எந்தவொரு ஐயமுமில்லை.

## 6.0 முடிவுரை

தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை முருகப்பெருமானின் எல்லையில்லாத கருணையால் முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பன்னிரு திருமுறைகளைத் தொகுத்துள்ளார். தீந்தமிழ்க் கவிகளை இயற்றுவதில் வல்லவர் என்பதாலே 'வரகவி' என அழைக்கப்பட்ட தேனூர் வரகவி வே. செ. சொக்கலிங்கனார் சிறந்த முருகனடியாராகத் தாம் ஏற்ற பணியை செவ்வனே செய்து முடித்து, முருகன் அடியார்கட்கு என 'சேய்த் தொண்டர்த் தொகை' மற்றும் 'சேய்த்தொண்டர் புராணம்' போன்ற நூல்களைப் பாடியருளினார். இவ்விருவரும் நமக்களித்த முருகவேள் பன்னிரு திருமுறையின் பன்னிரண்டாம் திருமுறை, முருகப்பெருமானின் அருளில் திளைத்த முருகனடியார்களின் வரலாற்றினையும் அனுபவங்களையும் தெள்ளத் தெளிவாக விளக்கிக் கூறுகின்றன. இதில் பக்தியின் உன்னத நிலை, அடியாரின் பணிவு மற்றும் முருகனின் கருணை ஆகியவை ஒருங்கிணைந்து வெளிப்படுகின்றன. ஆக, முருகவேள் பன்னிரு திருமுறை தமிழ்ப் பக்தி இலக்கியத்தில் தனித்துவமிக்க பங்களிப்பாகவும், முருக பக்தி மரபின் தொடர்ச்சியை நிலைநிறுத்தும் ஆன்மிகச் சான்றாகவும் திகழ்கிறது என்பது வெள்ளிடைமலையாகும்.

## References


Chengalvaraya Pillai, V. Su. (1992). *Murugavel Panniru Thirumurai*, Vol. 1 (3rd ed.). Chennai: Tirunelveli South India Saiva Siddhanta Publishing Society Ltd.

Chengalvaraya Pillai, V. Su. (1992). *Murugavel Panniru Thirumurai*, Vol. 2 (3rd ed.). Chennai: Tirunelveli South India Saiva Siddhanta Publishing Society Ltd.

Chengalvaraya Pillai, V. Su. (1992). *Murugavel Panniru Thirumurai*, Vol. 3 (3rd ed.). Chennai: Tirunelveli South India Saiva Siddhanta Publishing Society Ltd.

Chengalvaraya Pillai, V. Su. (1992). *Murugavel Panniru Thirumurai*, Vol. 4 (3rd ed.). Chennai: Tirunelveli South India Saiva Siddhanta Publishing Society Ltd.

Chockalinganar, Ve. Se. (1960). *Murugavel Panniru Thirumuraiyil Pannirandaam Thirumuraiyagiya Seiththondar Puranam (Murukanadiyaargal Varalaaru)*. Chennai: Thanikaimani, Rao Bahadur V. Su. Chengalvaraya Pillai.

Ganapathi Subramanian. (August 23, 2020). *Murugavel Panniru Thirumurai Minnool Vadivil*. https://mahaperiyavaa.blog/2020/08/23

Gnanam, P. (2001). *Tamil Ilakkiyathil Muruga Kadavul*. Chennai: Manickavasagar Publications.

Kandasamy, So. Na. (1995). *Thirumurai Ilakkiyam* Chennai: International Institute of Tamil Studies.

Murali, V. Mu. (February 8, 2020). *Tamil Valartha Muruga Bakthargal*. https://writervamumurali.wordpress.com/2020/02/08

Pazhaniyappan, M. (November 20, 2014). *Muruga Thondargalin Mugavari Seiththondar Puranam*. https://manidal.blogspot.com/2014/11/blog-post_20.html

Rajantheran, M., Sillaly, K., & Vignarasa, R. (2012). *Hindu Samayam Oor Arimugam*. Petaling Jaya: Malaysia Hindu Sangam.

Saami. (April 24, 2013). *Murugavel Panniru Thirumurai*. https://arundhtamil.blogspot.com/2013/04/169.html

Saami. (November 18, 2015). *Murugavel Panniru Thirumurai*. https://arundhtamil.blogspot.com/2015/11/276.html

Satguru Bodhinatha Veylanswami. (2018). *Sivanai Adaiyum Vazhi: Ilaiyorgalukkaana Samaya Paadam*. Malaysia: Sampoorna Printers Sdn. Bhd.

Subramanian, K. (1981). *Muruga Bhakti Ilakkiyam*. Madurai: International Institute of Tamil Studies.

Swami. (August 19, 2019). *Seiththondar Puranam*. https://swamyuyirmei.wordpress.com/tag/seithondar-puranam/

Varadarasanar, Mu. (1965). *Tamil Ilakkiya Varalaaru*. Chennai: Iniyaval Publications.

______________. (1987). *Saiva Samaya Vilakkam*. Kuala Lumpur: University of Malaya Hindu Society.

______________. (1998–2011). *Va. Su. Chengalvaraya Pillai Eluthiya Arunagirinathar – Varalaarum Noolaraichiyum*. Project Madurai.

பின்னிணைப்பு 1

**சேய்த்தொண்டர் புராணத்தில் இடம்பெற்றுள்ள சேய்த்தொண்டர்களின் பாடல் எண்களும் எண்ணிக்கையும்**

| எண் | தனியடியார்/தொகையடியார் | பாடல் எண் | பாடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | செந்தில்வாழ் அந்தணர் | 49-77 | 29 |
| 2 | அகத்திய நாயனார் | 78-137 | 60 |
| 3 | பகீரத நாயனார் | 138–146 | 9 |
| 4 | முசுகுந்த நாயனார் | 147–171 | 25 |
| 5 | நாகனார் நாயனார் | 172–195 | 24 |
| 6 | நக்கீர தேவ நாயனார் | 196–361 | 166 |
| 7 | நல்லியக்கோட நாயனார் | 362–407 | 46 |
| 8 | ஔவைப் பிராட்டியார் | 408–498 | 91 |
| 9 | சேந்தனார் நாயனார் | 499–508 | 10 |
| 10 | கச்சியப் சிவாசாரிய நாயனார் | 509–578 | 70 |
| 11 | முருகம்மையார் | 579–611 | 33 |
| 12 | பொய்யா மொழியார் நாயனார் | 612–671 | 60 |
| 13 | அருணகிரிநாத சுவாமிகள் | 672–1295 | 624 |
| 14 | குமரகுருபர சுவாமிகள் | 1296–1575 | 280 |
| 15 | சிவப்பிரகாச சுவாமிகள் | 1576–1669 | 94 |
| 16 | திருஞானசம்பந்த தேசிக நாயனார் | 1670–1709 | 40 |
| 17 | சம்பந்த சரணாலய சுவாமிகள் | 1710–1804 | 95 |
| 18 | மார்க்கசகாய தேவ நாயனார் | 1805–1812 | 8 |
| 19 | குணசீல நாயனார் | 1813–1836 | 24 |
| 20 | சிதம்பர தேவ நாயனார் | 1837–1926 | 90 |
| 21 | வென்றிமாலை நாயனார் | 1927–1956 | 30 |
| 22 | பகழிக் கூத்த நாயனார் | 1957–1976 | 20 |
| 23 | கவிராஜ பண்டாரத்தடிகள் நாயனார் | 1977–1982 | 6 |
| 24 | கச்சியப்ப முநிவ நாயனார் | 1983–2085 | 103 |
| 25 | மாதவ சுப்பிரமணிய நாயனார் | 2086–2126 | 41 |
| 26 | சிதம்பர முநிவ நாயனார் | 2127–2136 | 10 |

| | | | |
|---|---|---|---|
| 27 | கந்தப்ப நாயனார் | 2137–2166 | 30 |
| 28 | வேல்மயிலென்பார் | 2167–2172 | 6 |
| 29 | ஆலயத் தொண்டர் | 2173–2176 | 4 |
| 30 | முருகனையே பாடுவார் | 2177–2181 | 5 |
| 31 | திருவருளைச் சிந்திப்பார் | 2182–2186 | 5 |
| 32 | திருத்தணியிற் பிறந்தார் | 2187–2191 | 5 |
| 33 | கந்தனையே போற்றுவார் | 2192–2198 | 7 |
| 34 | பாலசுப்பிரமணிய நாயனார் | 2199–2239 | 41 |
| 35 | சின்னப்ப நாயனார் | 2240–2252 | 13 |
| 36 | சாமிநாத நாயனார் | 2253–2292 | 40 |
| 37 | தொண்டரடித் தொண்டர் | 2293–2297 | 5 |
| 38 | குகனேரியப்ப நாயனார் | 2298–2335 | 38 |
| 39 | ஞான வரோதய நாயனார் | 2336–2380 | 45 |
| 40 | இராமலிங்க நாயனார் | 2381–2477 | 97 |
| 41 | கவிகுஞ்சர நாயனார் | 2478–2483 | 6 |
| 42 | மாம்பழக் கவிச்சிங்க நாயனார் | 2484–2497 | 14 |
| 43 | தண்டபாணி நாயனார் | 2498–2545 | 48 |
| 44 | குமரகுருதாச நாயனார் | 2546–2588 | 43 |
| 45 | கல்லாட நாயனார் | 2589–2600 | 12 |
| 46 | கடுவன் இளஎயின நாயனார் | 2601–2603 | 3 |
| 47 | நல்லந்துவ நாயனார் | 2604–2609 | 6 |
| 48 | குன்றம்பூத நாயனார் | 2610–2614 | 5 |
| 49 | நல்லழிசியார் நாயனார் | 2615–2621 | 7 |
| 50 | கேசவ நாயனார் | 2622–2625 | 4 |
| 51 | நப்பண்ண நாயனார் | 2626–2629 | 4 |
| 52 | நல்லச்சுத நாயனார் | 2630–2634 | 5 |
| 53 | சேறைக் கவிராஜ நாயனார் | 2635–2657 | 23 |
| 54 | சிற்றம்பல நாடிகள் நாயனார் | 2658–2672 | 15 |
| 55 | கலிசைச் சேவக நாயனார் | 2673–2686 | 14 |
| 56 | சிவஞான தேசிக நாயனார் | 2687–2689 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 57 | வைத்தியநாத தேசிக நாயனார் | 2690–2712 | 23 |
| 58 | சோமநாத நாயனார் | 2713–2718 | 6 |
| 59 | பண்டாரக் கவிராய நாயனார் | 2719–2729 | 11 |
| 60 | அண்ணாமலை நாயனார் | 2730–2742 | 13 |
| 61 | கவீ வீரராகவ நாயனார் | 2743–2760 | 18 |
| 62 | தேவராய நாயனார் | 2761–2774 | 14 |
| 63 | நிரம்ப அழகிய தேசிக நாயனார் | 2775–2789 | 15 |
| 64 | வேதாந்தசுப்பிரமணிய நாயனார் | 2790–2809 | 20 |
| 65 | அழகுமுத்து நாயனார் | 2810–2847 | 38 |
| 66 | இறந்தும் இறவாதார் | 2848–2856 | 9 |
| 67 | நாரத நாயனார் | 2857–2882 | 26 |
| 68 | போக நாயனார் | 2883–2885 | 3 |
| 69 | இடும்ப நாயனார் | 2886–2919 | 34 |
| 70 | பிரபுட தேவ நாயனார் | 2920–2930 | 11 |
| 71 | முத்தப்ப நாயனார் | 2931–2960 | 30 |
| 72 | புராணிகர்கள் | 2961–2967 | 7 |
| 73 | பாடாது விடுபட்டோர் | 2968–2969 | 2 |
| 74 | இனிவருவோர் | 2970–2973 | 4 |
| 75 | திருப்புகழ்ச் சுப்பிரமணிய நாயனார் | 2974–3094 | 121 |
| 76 | சச்சிதாநந்த நாயனார் | 3095–3300 | 206 |
| 77 | செல்லப்ப நாயனார் | 3301–3330 | 30 |
| 78 | மீனாட்சியம்மையார் | 3331–3333 | 3 |
| (மூலம்: சொக்கலிங்கனார், வே., சே., 1960, i-iv) | | | |